Crl.Misc.39

D E P O S I T I O N   O F   W I T N E S S
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.111/2024

**P.W**.1 (LW1)

| | |
|---|---|
| Name | : **திரு.அரிதாஸ்** |
| Father/Husband Name | : திரு,திருவேங்கடம் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**எதிரி ஆஜரில் உள்ளார்.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.06.2026

**முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது வெங்கம்பாக்கம் கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன திருவேங்கடம் என்னுடைய அப்பா ஆவார்.**

2) கடந்த 05.04.2019 ம் தேதி மாலை 7.00 மணியளவில் வெங்கம்பாக்கத்திலிருந்து திருக்கழுக்குன்றம் செல்லும் சாலையில் வெங்கம்பாக்கம் SS பழமுதிர்சோலை கடை சற்று தள்ளி உள்ள ஒரு கடைக்கு என் அப்பா திருவேங்கடம் நடந்து சென்றுக் கொண்டிருந்த போது TN 19 AF 4335 என்கிற பதிவு எண் கொண்ட இரு சக்கர வாகனம் என்னுடைய அப்பாவின் பின்பக்கம் மோதிவிபத்து ஏற்பட்டது. அந்த விபத்தில் என்னுடைய அப்பாவிற்கு தலை, கழுத்து மற்றும் வலது கையில் எலும்பு முறிவு மற்றும் இடது கால் தொடையில் பலத்த காயம் ஏற்பட்டது. என் அப்பாவை ஆம்புலன்ஸ் மூலம் செங்கல்பட்டு அரசு

மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று பின்னர் அன்றிரவே மேல் சிகிச்சைக்காக சென்னை ராஜூவ் காந்தி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன். என் அப்பா சிகிச்சை பலனில்லாமல் கடந்த 11.04.2019ம் தேதி இறந்துவிட்டார். இந்த விபத்து சம்மந்தமாக 06.04.2019ம் தேதி காலை 9.00 மணியளவில் சட்ராஸ் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். பின்னர் 12.04.2019ம் தேதி என் அப்பாவின் பிரேதத்தை பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்த புகார் ஆகும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். நான் 10ம் வகுப்பு படித்துள்ளேன். என்னுடைய அப்பாவிற்கு 05.04.2019ம் தேதி விபத்து ஏற்பட்டது. விபத்து நடந்து மறுநாள் தான் நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் கொடுத்த புகாரை நான் தான் எழுதினேன். புகாரில் தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். விபத்து சம்மந்தமாக எனக்கு ஊர்காரர்கள் தகவல் சொல்லிதான் தெரிந்துக் கொண்டேன். விபத்து நடந்த போது நான் வீட்டில் தான் இருந்தேன் என்றால் சரிதான். விபத்து குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு எண் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் விபத்து ஏற்பட்ட பிறகு அந்த வாகனத்தை அந்த இடத்தில் பிடித்து வைத்திருந்தார்கள் அதனால் தான் பதிவு எண் தெரிந்துக் கொண்டேன். என்னுடைய புகாரில் விபத்து ஏற்படுத்திய வாகனத்தை யார் ஓட்டி வந்தார்கள் என்கிற விவரத்தை

குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சம்பவ இடம் சென்றபோது அந்த இடத்தில் சுமார் 30 முதல் 40 பேர் இருந்தார்கள் என்றால் சரிதான். போலிசார் எழுதிக் கொடுத்த புகாரில் கையெழுத்து செய்துவிட்டு இழப்பீடு வேண்டி என் தந்தைக்காக தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS

( Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUKALUKUNDRAM.

Case No. CC.111/2024

**P.W**.2 (LW2)

| | |
|---|---|
| Name | : **திரு.மண்ணு** |
| Father/Husband Name | : திரு,கிஷ்டப்பன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**எதிரி ஆஜரில் உள்ளார்.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.06.2026

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது வெங்கம்பாக்கம் கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன திருவேங்கடம் என்னுடைய பக்கத்து வீட்டில் வசிப்பவர். சாட்சி அரிதாஸ் என்னுடைய பக்கத்து வீட்டுக்காரர்.

2) கடந்த 2019ம் வருடம் ஒரு நாள் மாலை 7.00 மணியளவில் திருக்கழுக்குன்றத்திலிருந்து வெங்கம்பாக்கம் வந்துக் கொண்டிருந்த போது வெங்கம்பாக்கத்தில் எதிர் திசையில் நடந்த வந்துக் கொண்டிருந்த திருவேங்கடம் என்பவர் மீது அவருக்கு பின்னால் வேகமாக வந்த இரு சக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது. விபத்து ஏற்படுத்தியவுடன் அந்த இரு சக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் அந்த இடத்திலிருந்து ஓடிவிட்டார். விபத்து ஏற்படுத்திய வாகனம் TN 19 AF 4335 என்ற பதிவு எண் கொண்ட பஜாஜ் இருசக்கர வாகனம் ஆகும். விபத்து சம்மந்தமாக காவல் நிலையத்தில் அரிதாஸ் புகார் கொடுத்திருந்தார். இது குறித்து போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

புகார்தாரர் அரிதாஸ் என்னுடைய பக்கத்து வீட்டை சேர்ந்தவர். சாட்சிகள் மதிவாணன், மனோகரன் ஆகியோர் என்னுடைய உறவினர்கள் என்றால் சரிதான். நான் வெங்கம்பாக்கத்திலிருந்து திருக்கழுக்குன்றத்திற்கு மதியம் 2 மணிக்கு சென்றிருந்தேன். நான் இரு சக்கர வாகனத்தில் சென்றேன். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை ஒரு மாதம் கழித்து விசாரணை செய்தார்கள். போலிசார் வீட்டில் வந்து விசாரணை செய்தார்கள். நான் வெங்கம்பத்திற்கு சென்றுவந்த இரு சக்கர வாகனத்தின் பதிவு எண்ணை போலிசாரிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த போது சுமார் 20 முதல் 30 பேர் சம்பவ இடத்தில் இருந்தார்கள் என்றால் சரிதான். நான் காவல் நிலையத்தில் விபத்து சம்மந்தமாக புகார் கொடுக்கவில்லை. நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும் விபத்தில் இறந்துபோன நபர் என்னுடைய ஊர்காரரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு எண் எனக்கு தெரியாது என்றாலும், போலிசார் சொல்லிக் கொடுத்தன் பேரில் தற்போது பொய்யாக விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு எண்ணை குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்த இடத்திலிருந்து அரிதாஸ் என்பவருக்கு ஆள் அனுப்பி தகவல் சொன்னேன். போலிஸ் விசாரணையில் நான் தான் அரிதாஸ்சுக்கு விபத்து சம்மந்தமாக தகவல் சொன்னேன் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.